**சார்பு நீதிமன்றம், ஓமலூர்.**
LAOP. 98/2020

நாள். 23.11.2022

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 23.11.2022 ம் நாளாகிய இன்று திருமதி.மங்கையர்கரசி, Gr-II பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | | |
|---|---|---|---|---|
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி: | : எ.ம.சா.4 | ஜாதி | | |
| பெயர் | உஷாராணி | தொழில் | : | |
| க/பெ. | : சண்முகம் | மதம் | : | |
| கிராமம் | : | வயது | : | |
| வட்டம் | : | | | |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவின் 11ம் எதிர்மனுதாரர். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை படித்துப் பார்த்து உண்மை என தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**<u>குறுக்கு விசாரணை - மனுதாரர் தரப்பு</u>**

எனது கணவர் 28.10.2008ம் தேதியில் காலமாகிவிட்டார். தாவா சொத்து எனது மாமியார் பெயரில்தான் பட்டா உள்ளது, அது அவருக்கு சொந்தமான சொத்து. என் கணவர் இறப்பதற்கு முன்பாகவே என் மாமியார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது கணவர் சண்முகத்தின் வாரிசுகள் யார் யார் என்றால் நான், முரளிதரண், நாகேந்திரன், தேவராஜ் ஆகியோர்கள் ஆவார்கள். என் கணவருக்கு வரவேண்டிய இழப்பீட்டு தொகையை நான் எனது மகன்கள் சார்பாக பெற்றுக்கொள்கிறேன். இழப்பீடு தொகை அதிகப்படுத்தி கேட்டு நான் மேல்முறையீடு செய்யப்போகிறேனா என்றால் இல்லை. இழப்பீடு தொகை போதுமானது. தாவா சொத்து சம்மந்தமாக எந்த வழக்கும் நிலுவையில் இல்லை.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

**ஒப்பம்/RW4**

**ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்**